**அனர்த்த முகாமைத்துவ நிலையம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை

பயன்படுத்துதல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முழுமையான பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற | இந்த சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்திருந்ததுடன், | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 33,918,887 கிரயமான 03 வகையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு செய்து மீண்டும் மீளாய்வு செய்து இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்தரு ஆயுட் காலமும் முடிவடைந்துள்ளது. | |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பிரகாரம் சேவை நலன் ஆயுட்கால மதிப்பீட்டு முறைமை (Actuarial valuation Method) இன் பிரகாரம் கணிப்பிடப்பட்டு பணிக் கொடைகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்க வேண்டியிருந்த போதிலும், நிறுவனத்தினால் ரூபா 47,970,000 தொகையான பணிக்கொடை ஒதுக்கங்கள் நியமத்தில் குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பிரகாரம் ஆயுட் கால எண்ணிக்கை மதிப்பீட்டு முறைமையின் பிரகாரம் ஊழியர் நலன்கள் கணிப்படும் நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளது. எதிர்வரும் வருடத்தின் போது தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பிரதான பணியான அனர்த்தத்தை குறைக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக திறைசேரியில் இருந்தும், ஏனைய உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்தும் கிடைக்கின்ற மூலதன மானியங்களின் கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி மானியம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் மானியங்களின் பெறுவனவு மற்றும் செலவினங்கள் சரியான பிரகாரம் கணக்கீடு செய்து வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104(1) | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆகஸ்ட் வரை 11 வாகனங்கள் தொடர்பாக ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடமை நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும் போது ஏற்பட்ட இந்த சகல விபத்துக்களும் சிறு விபத்துக்களாக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆகஸ்ட் வரை ஏற்பட்டிருந்த 23 விபத்துக்களில் 11 விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 104(3) | நட்டம் தொடர்பாக பூரணமான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படுமாயின் ஆரம்ப அறிக்கையொன்று அனுப்ப வேண்டிய போதிலும் 15 வாகன விபத்துக்கள் தொடர்பாக அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பழுதுபார்த்தலின் காரணமாக எந்தவொரு தொகையும் நிறுவனத்தினால் செலுத்துவதற்கு ஏற்படவில்லை. | நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணம் 104(4) | 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரைக்குரிய 33 வாகன விபத்துக்கள் தொடர்பாகவும், 2018 முதல் 2020 ஆகஸ்ட் வரையான 31 வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | மேலே இலக்கம் (i)(ஆ) மற்றும் (ii) இன் கீழுள்ள பதில் பொருத்தமானதாகும். | நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

.

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | நிதிப் பிரமாணம் 105 | 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த இருப்பு மெய்மெய்யாய்வின் போது இனங்காணப்பட்ட காலாவதியாகிய மற்றும் அழிக்கப்பட வேண்டிய பொருட்கள், 409 விடயங்களில் பற்றாக்குறை மற்றும் காணாமல் பொருட்கள் என்பன பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 மற்றும் 2020 நிதியாண்டு இரண்டின் இறுதியிலும் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக விற்றுத் தீர்க்கும் குழு நியமிக்கப்பட்டு தேவையான மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | நிதிப் பிரமாணம் 110 | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிலையத்தினால் 2014 முதல் 2017 வரையான வருடாந்த அறிக்கை 2021 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 – 2019 ஆம் ஆண்டுகளில் தேவையான வருடாந்த அறிக்கை அச்சிடுவதற்கு அண்ணளவாக ரூபா 4 மில்லியன் அளவில் செலவாகின்றமை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்த தொகை 2021 ஆம் ஆண்டின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி ஏற்பாடுகளில் ஒதுக்கிக் கொள்வதற்கு முடியாதிருந்தமையினால் பொது திறைசேரியின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் நாயகத்தினால் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மேலதிக செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 66.72 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 65.03 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1.69 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது இந்த வீழ்ச்சிக்கு மானியம் மற்றும் ஏனைய வருமானம் வீழ்ச்சியடைந்தமை காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சட்ட ரீதியான உரித்தை கையேற்கும் நடவடிக்கைகள் இன்றி வளிமண்டலவியல் திணைக்களத்திற்குரிய காணியொன்றில் ரூபா 1,034.39 மில்லியன் செலவில் நிலையத்தின் பிரதான அலுவலக கட்டிடம் 2010 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் பெயரில் கட்டிடம் அமைந்துள்ள இந்த காணியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது | இந்த கட்டிடம் மற்றும் அந்த கட்டிடத்தை சட்ட ரீதியாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், மனிதவள கொள்கை தயாரிக்கும் நடவடிக்கைகளும் 2021 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கொள்கையின் வரைவு 2020 செப்டம்பர் 03 ஆம் திகதி தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 04 பிரிவுகளின் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையும், வரைவு திருத்தப்படுவதுடன், நாட்டில் காணப்படுகின்ற கொவிட் - 19 வைரஸ் நிலைமையின் அடிப்படையில் பூர்த்தி செய்ய வேண்டிய திகதியில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துவதற்கு 2008 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரிய திருத்தம் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துதல் அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணியாக இருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெறல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையை சுற்றி முழுமையாக இடர் தடுக்கும் 77 கோபுரங்களின் புனருத்தாபனம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் ரூபா 134,746,418 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த நடவடிக்கைகள் உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தப்படாமல் ரூபா 89,764,707 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த பணியில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட 77 கோபுரங்களை செயற்படு நிலைமையில் பேணிச் செல்வது வெற்றியளித்திருக்கவில்லை. | இந்த கோபுரங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்ய முடியாமைக்குரிய காரணம் தொடர்பாக சகல தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டு அதற்குரிய காரணங்களை கவனத்தில் கொண்டு அந்த காலத்தை நீடித்தல் கால ரீதியில் முகாமைத்துவ குழுவினதும் அமைச்சு செயலாளர் அவர்களின் அங்கீகாரத்தின் பிரகாரமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உரிய பணிகள் உடன்படிக்கையின் பிரகாரம் செய்யப்பட வேண்டியிருந்ததுடன், உரியவாறு அமுல்படுத்தப்பட்டிருந்தா என்ற உறுதிப்படுத்தலின் அடிப்படையில் மாத்திரம் பணம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2020 பெப்ரவரி 13 ஆம் திகதிய அனர்த்த அபாயங்களை குறைக்கும் செயற்திட்டம் தொடர்பான ஆலோசனைக் கோவையின் (1) பந்தியின் பிரகாரம் அரச நிறுவனங்களின் ஆபத்துக்களை | மாவட்ட செயலாளர்கள் இந்த செயற்திட்டத்தில் பரிந்துரைகளை சமர்ப்பித்திருந்ததுடன், இந்த செயற்திட்டத்திற்காக அந்த நிறுவனங்கள் செலவினம் ஒன்றை | செயற்திட்டம் தொடர்பான ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைப்பதற்காக போதியளவான பௌதீக மற்றும் நிதிசார் வளங்கள் காணப்படாதிருந்தமை அந்த நிறுவனங்களினால் உறுதிப்படுத்தப்பட்டு கோரிக்கை விட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான கோரிக்கைகள் எதுவும் இன்றி ரூபா 29,958,885 தொகை 26 செயற்திட்டங்களுக்காக பல்வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | செய்திருக்கவில்லை. | |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 13,782,677 பெறுமதியான 11 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்திச் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், ரூபா 2,350,000 நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்ட 03 செயற்திட்டங்களின் உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தை பூர்த்திசெய்தல் ஆவணங்களை தற்போது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த நியமத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டியமைக்கான உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனர்த்த முகாமைத்துவத்திற்காக பல்நோக்கு ஆபத்து குறுக்குவெட்டை தயாரிப்பதற்காக 2016 முதல் 2019 வரை திறைசேரியில் இருந்து ரூபா 247 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 201 மில்லியன் கிடைத்திருந்ததுடன், ரூபா 53 மில்லியன் உரிய நோக்கத்திற்கு புறம்பாக செலவிடப்பட்டிருந்தது. | அமைச்சு செயலாளரினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் சட்ட ரீதியாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டு நிதி ஏற்பாட்டை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், நிதி ஏற்பாட்டிற்கு புறம்பான பணிகளுக்காக ஈடுபடுத்தல் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு பதிலளிக்க முடியாதிருந்தது. | நிதியத்தை உரிய பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பதவியணியினர் நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் நிலையத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 465 ஆக இருந்த போதிலும், சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர் 304 ஆக இருந்தமையினால் 161 வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது மனிதவள திட்டத்தை திருத்துவதற்கோ நிலையம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான 465 பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த பதவியணியில் 304 பேர் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், 161 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மனிதவள திட்டத்தை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |